මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
**MINISTRY OF FINANCE AND PLANNING**

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01 Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)- 11 - 2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: PUB/FIN/T/02/10
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2009.06.04

**அரச நிதிச் சுற்றறிக்கை இல: PF/ 429 (i)**

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சட்டமுறைச்சபைகள்/அரசாங்க உடைமைக் கம்பனிகளின் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

## தேசிய பெறுகை முகவர் நிலையத்தை மூடிவிடல் மற்றும் பெறுகை நடவடிக்கைகளை அரச நிதித் திணைக்களத்துக்கு ஒப்படைத்தல்

தேசிய பெறுகை முகவர் நிலையத்தை 2008 மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் விதத்தில் மூடிவிடுவதற்கும் மற்றும் அந்த நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட்ட விடயங்களை அரச நிதித் திணைக்களத்துக்கு ஒப்படைத்தல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட PF/429ஆம் இலக்க மற்றும் 2008.03.17 ஆம் திகதியுடைய அரச நிதிச் சுற்றறிக்கைக்கு மேலதிகமானதாகும்.

02. தேசிய பெறுகை முகவர் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள சகல வழிகாட்டல்களிலும, விதிக் கோவைகளிலும் மற்றும் அந்த நிறுவனத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள "தேசிய பெறுகை முகவர் நிலையம் மற்றும் தேசிய பெறுகை முகவர் நிலையத்தின் தவிசாளர்/பிரதான நிறைவேற்று உததியோகத்தர்" என்பதற்குப் பதிலாக, முறையே " பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களம் மற்றும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகம்" என உட்சேர்க்கப்படுவதன் மூலம் உரித்துடைய உறுப்புரை இத்தால் திருத்தம் செய்யப் படுகின்றது.

03. தேசிய பெறுகை முகவர் நிலையத்திற்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும் என இந்த வழிகாட்டல்களில் அல்லது விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல அறிக்கைகள், கரும்புள்ளிப் பதிவுகள் மற்றும் பெறுகை அறிவித்தல்கள் போன்றவை பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

04. அரச பெறுகை நடவடிக்கைகளுக்காக சகல வழிகாட்டு நெறிகள், பிற்சேர்ப்பு வழிகாட்டல்களின் திருத்தங்கள், விதிக் கோவைகள் மற்றும் சுற்றறிக்கைகள், பெறுகை அறிவித்தல்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்கள் போன்றவை பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத் தளத்தில் (www.pfd.gov.lk) உட்சேர்க்கப்பட்டுள்ளன.

05. மேலதிக விபரங்களுக்கு அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொள்ளவும் (தொலைபேசி இல. 011 – 2484614 தொலை நகல் இல. 011 – 2436337)

ஒப்பம்: எஸ்.அபேசிங்க

திறைசேரிச் செயலாளர்

பிரதி: 1. ஜனாதிபதியின் செயலாளர்

2. கணக்காய்வாளர் நாயகம்